## தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியுள்ள்தாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(ஆ), 1.6.2(அ),(ஆ), 1.6.4 9அ),(ஆ)(ஈ),(உ) 2.2 பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முற்பணக் கணக்கு பெறுமதிகளில் வைப்புக் கணக்கின் பெறுமதி கழிக்கப்பட்டதன் பின்னர் கிடைத்த மீதிதேறிய சொத்துக்களின் கீழ் சீராக்கப்பட வேண்டிய போதும் அவ்வாற செய்யாமை காரணமாக மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புக்களுக்கு இடையே வேறுபாடு ரூபா 29,242,328 மறை பெறுமதியொன்று தேறிய சொத்தாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் கூலி வேலை முற்பண மீதிகள் மாற்றப்பட்டதன் பின்னர் விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாடு நீங்குவதாகவும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கல் ஆரம்ப மீதியை சரக்க குறித்துக் கொண்டதாக |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,930,408,065 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போது அதற்குரிய விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்படா மையால் அப்பெறுமதிகளின் சரியானதன்மையை உறுதிப் படுத்த முடியாதிருந்தது | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமதிகளை உறுதிப்படுத்துவுதற்காக விரிவான அட்டவணை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மதிப்பீடு செய்யப்படாத எஞ்சிய கட்டிடங்கள் மதிப்பீட்டின் பின்னர் மற்றும் ஏனைய அனைத்து சொத்துக்களின் பெறுமதி 2020 திசெம்பர் 31 சீராக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதாக |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கூலி மற்றும் வேலை முற்பணக் கணக்கு மற்றும் கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு ஆகியவற்றின் மீதிகள் சமமாக இருக்க வேண்டும். இருப்பினும், கூலி மற்றும் வேலை முற்பணம் இரட்டை பதிவின் பிரகாரம் கணக்கு வைக்கப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கூலி மற்றும் வேலை முற்பணக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் இல்லையெனவும் கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கில் ரூபா 32,332,805.ஆன மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கை 250/2016 மற்றும் 2016 யூன் 09 இன் பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். | விசாரணையுடன் இணங்குவதாகவும். கூலி மற்றும் வேலை முற்பணக் கணக்கின் மீதி 2020 இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்க நடவடிக்கை எடுப்பதாகவும் |
| (ஆ) மாவட்ட செயலகம் திறைசேரி மாற்றல் குறிப்புகளை தொடர்புடைய ஆண்டில் சமர்ப்பிக்காமை மற்றும் மீளாய்வாண்டின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட மாற்றல் பத்திரங்கள் மீளாய்வாண்டிற்காக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது, இதன் காரணமாக கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் படி 27,387,159 ஆக இருந்த போதும் அது | மீதிகளுக்கு இடையே வேறுபாடுகளுக்கு காரணங்களைப் பரீட்சிப்பதற்கும் காலப்பகுதியில் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களைத தயாரிக்கும் போது உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய 2019 ஆம் ஆண்டிலும் 2019 ஆம் ஆண்டிற்குரியவற்றை 2020 ஆம் ஆண்டிலும் மமாற்றல் பத்திரங்கள் திறைசேரிக்கு சமர்ப்பித்து தீர்வு செய்வதாக |

நிதிக்கூற்றுக்களில் ரூபா 26,039,146 எனக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இறுதி சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ரூபா 41,579,328 ஆக இருந்த போதும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 32,332,805 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூலி மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையே முறையே ரூபா 1,348,013 மற்றும் ரூபா 9,246,523 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.6.3 கணக்காய்விற்கு சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் மின்தூக்கி பொருத்துதல் மற்றும் மாத்தளை பிரதேச செயலகத்தின் 419 நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 178,686,608 தொகையான ஒப்பந்தங்களுக்குரிய 420 உடன்படிக்கைகள் பிரதிகளை நிதிப் பிரமாணம் 702 இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. . | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாவட்ட செயலகத்தின் தவறொன்று காரணமாகவும் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்படாமை காரணமாக இடம்பெற்றதாகவும் 2020 ஆம் ஆண்டிலிருந்து குறித்த உடன்படிக்கை பிரதிகளை கணக்காய்விற்கு வழங்குவதாகவும் |

### 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நிதிப்பிரமாணம் 389 | • மாத்தளை பிரதேச செயலகத்தின் ரூபா 24,918,073 பெறுமதிக்காக எழுதப்பட்ட 174 காசோலைகள் பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பில் வைக்கப்படாமல் கணக்குப் பிரிவின் 04 வெளி விடய பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு விநியோகிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீராக்குவதாக . |
| (ஆ) 2013 யூன் 12 ஆந் திகதிய HAF/01/ 09/நானாவித ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலகள் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | வெளிக்கள உத்தியோகத்தர்களின் மாதாந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத ஆரம்பத் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தாபன தலைவரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உக்குவல பிரதேச செயலகத்தின் 17 பேர் அவ்வாறு செயற்படாத 138 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவறுகளை திருத்திக் கொள்வதற்கு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தாகவும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2008 யூன் 13 ஆந் திகதிய LD-1-34-(1) 2008 ஆம் இலக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு செயலாளரினதும் 2018 மார்ச் 28 ஆந் திகதிய 10/2018 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணியை அத்துமீறி பிடித்துக்கொள்ளல் மற்றும் முறையற்ற விதத்தில் எடுப்பதை தவிர்க்கும் நோக்கில் அரசின் காணி அத்துமீறி பிடித்துக் கொள்ளல் மற்றும் முறையற்ற விதத்தில் எடுப்பது தொடர்பாக பூரண அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் முன்னைய ஆண்டில் 57 கிராம சேவையாளர்களால் அவசியத்தின் பிரகாரம் 1178 இரு வார அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிராம சேவையா ளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அறிக்கை கட்டாயமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக சகல பிரதேச செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளத ாக |
| (ஈ) | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுக் கோவையின் (1 ஆம் தொகுதியின்) xviii ஆம் அத்தியாயத்தின் அரச உத்தியோ கத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக ஏற்பாடுகள் | ஒரு இடத்தில் 05 ஆண்டு காலம் சேவை பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் உகுவெல பிரதேச செயலகத்தில் 5 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக சேவை புரியும் 12 உத்தியோகத்தர்கள் இடமாற்றங் களுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஊழியர் அதிருப்தி, இடமாற்றம் தேவையான ஏனைய உத்தியோகத்தரு க்கு சந்தர்ப்பம் கிடைக்காமை மற்றும் பல்வேறு சிக்கல்கள் ஏற்படக்கூடு மாகையால் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருத்தல் | 2020 வருடாந்த இடமாற்றத்திற்காக கோரப்பட்டிருந்த போதும் இடமாற்றம் கிடைக்கவில்லையென |
| (உ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 வழிகாட்டி | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக ஒப்பந்தங்களை கையளிக்கும் போது அச்சங்கதத்தின் இயலுமை தொடர்பாக திருப்தியடையாமல் யட்டவத்த பிரதேச செயலகத்தினால் ரூபா 1,917,000 ஆன 06 ஒப்பந்தங்களை 06 சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல் கோவையின் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி செயற்பாடுகளை விஹாராதிபதி அவர்களின் வேண்டுகோளின் பேரில், ஒப்பந்தம் பதிவுசெய்யப்பட்ட விஹஹாரை பங்களிப்பு அல்லது பிரிவில் உள்ள மற்றொரு சங்கத்திற்கு வழங்கப்பட்டது, அங்கு சங்கங்களின் நிதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | திறனை விட சமூக பங்களிப்பிற்கு கவனம் செலுத்தப்பட்டது. |
| (ஊ) | 2019 யூலை 09 ஆந் திகதிய GIR/2019/3V(INS &CIR ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் கடிதத்தின் 03 ஆம் பந்தி | பெறுமதி சேர் வரி அடிப்படையிலான பெறுமதி ரூபா 43,690,882 தொக தொடர்பான விபரங்கள் காலாண்டு முடிவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்காமல் 3 ½ மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரை கால தாமதத்துடன் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் காலங்களில் தாமதமின்றி அவ்வறிக்கை நடவடிக்கை எடுப்பதாக |

**2. நிதி மீளாய்வு**

--------------------------

**2.2 செலவின முகாமைத்துவம்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மூலதச் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 25 சதவீதம் அதாவது ரூபா 109,500,000 கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 49,891,722 அதாவது நிதிஏற்பாடுகளில் 11 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஒக்தோபர் 21 ஆந் திகதிய BD/GPS121/1/1-2018 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திரட்டிய செலவினங்களில் செலவினத்தலைப்பில் சேமிப்பு 15 சதவீதமாக முகாமை செய்தல் போதுமானதென தேசிய பாதீட்டு திணைக்களத்தின் இணக்கப்பாடு கிடைத்துள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய செலவின விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் செலவின விடயத்தின் கீழ் செயற்படுத்தப்பட் மூக அடிப்படையிலான பசுமை சமூக கழகங்களை உருவாக்குவதற்காக ரூபா 2,700,000 குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ஆண்டில் ரூபா 177,680 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,444,713 பொறுப்புகளுக்குட்பட்டு நிதி ஏற்பாடு பயன்பாடு ரூபா 1,622,393 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சேமிப்பு மொத்த நிதிஏற்பாட்டில் 40 சதவீதம் அதாவது ரூபா 1,077,607 ஆக இருந்தது. | மதிப்பீட்டை இயலுமானவரை சரியாக தயாரித்து குறைநிரப்பு மதிப்பீட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அம்பன் கங்க கோரளை பிரதேச செயலகம் ரூபா 900,000 ஆன நிதி ஏற்பாட்டை வேறு வகையில் செலவிடுவதற்கு திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் கோரிய போதும் அதற்கு அங்கீகாரம் கிடைக்காமையால் யட்டவத்த பிரதேச செயலாளரினால் அனுமதிக்காக சமர்ப்பித்த ரூபா 425,000 ஆன செயற்திட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படாமை இதற்கான காரணமாக இருந்தது. |

## 2.2 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இணக்கக்கூற்றின் பிரகாரம் ஓய்வுபெற்ற, சேவை விட்டுச்சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் மரணித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 512,606 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 03 மாதங்கள் முதல் 18 ஆண்டுகள் வரையான காலவீச்சொன்றை எடுத்திருந்தது. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பரகாரம் நடவடிக்கை எடுத்தல் | குறித்த கடன் மீதிகளில் தனிப்பட்ட கோவைகளில் சிக்கல்களை தீர்வுசெய்தவுடன் அறவிடுவதற்கும் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பவின் போது அறவிடுவதற்கும் தவணையாக அறவிடுவதற்கும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

**2.3 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் 11 பிரதேச செயலகங்களின் 21 செலவின விடயங்கள் இற்குரிய சனாதிபதி செயலகம் உட்பட 13 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களமொன்றினால் வழங்கப்பட்ட ரூபா 18,611,604 நிதிஏற்பாட்டை முழுமையாக பயன்படுத்தியிருக்கவில்லை. | நிதிஏற்பாடுகளை குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல வரை கையிலுள்ள பட்டியல்கள் ரூபா 11,073,017 ஆகவும் எஞ்சிய நிதிஏற்பாடான ரூபா 7,538,587 ஆன கட்டுநிதி இல்லாமையால் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) மாவட்ட செயலகத்தற்கு, சனாதிபதி செயலகம் உட்பட 14 அமைச்சுக்களாலும் 06 திணைக்களங்களாலும் மூலதன செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 1,208,261,130 மற்றும் ரூபா 3,116,220 ஆன நிதிஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் முறையே ரூபா 446,213,716 மற்றும் 1,639,375 என மொத்தம் ரூபா 447,853,135 ஆன நிதிஏற்பாடு முழுமையாக பயன்படுத்தி இருக்கவில்லை. | நிதிஏற்பாடுகளை குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திறைசேரியால் எரிபொருள் செயற்திட்டத்திற்காக கட்டுநிதி வழங்குவதாகவும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கயிலுள்ள பட்டியல்கள் ரூபா 507,885,681 இருந்ததாக |

(இ) மஹாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாடு

| | | |
|---|---|---|
| • மாவட்ட விவசாய பிரிவனால் கெள்வனவு செய்யப்பட்டு ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட நெல் இருப்பை அரிசியாக மாற்றியதன் பின்னர் சதோச நிறுவனத்திற்கு வழங்கும் செயற்பாட்டின் போது ரூபா 3,970,842 பெறுமதி 69979.5 கி.கி அரிசி இருப்பு சதே நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணக்கப்பாட்டின் பிரகாரம் அரிசி இருப்பினை பெற்றுக்கொள்வதற்கு அல்லது நட்டத்தை தீர்ப்பதற்கு தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளவாறாக 49879.5 கி.கி அரிசியே வழங்க வேண்டியுள்ளதாக இருப்பதாகவும் மாவட்ட விவசாய பணிப்பாளரால் அவ்வப்போது தொலைபேசிஊடாகவும், கடிதங்கள் மூலமாகவும் குறித்த நபர்களுக்கும் மாத்தளை பொலிசுக்கும் அறிவித்து அந்நபர்கள் வரவழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன் அதன்போது அரிசி இருப்பின் பெறுமதியை கொடுப்பனவு செய்ய இணங்கியதாகவும் அவர்கள் அரிசி கையிருப்பின் மதிப்பை செலுததுவதாக ஏற்றுக் கொண்டனர். |
| • மாத்தளை அலுவிஹார ரஜமஹா விஹாரயை அண்மித்து உள்நாட்டு உணவகமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 12.35 மில்லியன் கிடைத்து அதில் ரூபா 4.95 மில்லியன் திருப்பி அனுப்பியதன் பின்னர் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 7,410,000 ஆன நிதிஏற்பாட்டில் 34.1 சதவீதமான ரூபா 4,211,587 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டும். | நிர்மாணத்திற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய வெவ்வேறு அமைச்சுக்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக எடுத்த காலம் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக செயற்படுத்தும் காலச்சட்டகம் இலக்கிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு அதிகளவில் அழுததங்கள் பிரயோகிக்கப்பட்டதாக |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாதைத்துவ அமைச்சிலிருந்து ரத்தொட்ட பிரதேச செயலகத்திற்கு மண் சரிவு அதிக ஆபத்து காரணமாக மீள்குடியேற்றத்திற்காக கிடைத்த தேறிய ஏற்பாடான ரூபா 37,491,800 ஆன பெறுமதயில் ரூபா 14,091,800 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடுகளை குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைத்த பட்டியயலுக்காக பணம் 2020 முதல் காலாண்டில் கிடைத்தமையால் ஸிர்பார்த்த அபிவிருத்தி செயற்பாடுகள் தாமதமாகின. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| இனாமாலுவ பண்டைய கிராமங்கள் (11) நுழைவு புனரமைப்பின் போது புல் பிதலி பிடித்தல் மற்றும் அதன் பராமரிப்பு செயற்பாடுகளுக்காக ரூபா 81,576 மதிப்பீடு செய்யப்பட்டது, ஆனால் அதன நிறைவேற்றாதிருக்கையில நிர்மாணத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட தொகை வழங்குவதற்கு சான்றுறுதிப் படுத்தப்பட்டிருந்தது. | அரசிற்கு ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட வேண்டியதுடன் அதற்கு பொறுப்பானவர் தொடர்பில் எதிர்வரும் நடவடிக்கைககள் எடுக்க வேண்டுமெனவும் | இதன் நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அதன் பராமரிப்ப வேலைகளை உள்ளூராட்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்த விலகல் கட்டளைக்காக முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 1,001,342 கொடுப்பனவு உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. | விலகல் கட்டளைகளை சமர்ப்பித்து முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் முற்பணக் கொடுப்பனவு தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் | தேவையான சந்தர்ப்பங்களின் போது விலகல் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் கொடுப்பனவு எதுவும் இடம்பெறவில்லையெனவும் |
| (ஆ) | வாசல கோட்டை சமுர்த்தி வங்கியின் மேல் மாடியில் மேலதிக வேலை பகுதியை நிறைவேற்றவதற்காக ரூபா 191,316 முறையான அங்கீகாரமின்றி கொடுப்னவு செய்யப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் செயற்பட்டமை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக |
| (இ) | நகில்ஸ் அழகினை இரசிக்கும் கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாத ரூபா 216,202 ஆன 9 வேலை விடயங்களின் விலகலுக்காக முன் அங்கீகாரம் இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலவினம் முறையான அங்கீகாத்துட் மேற்கொள்ளப்பட்டதாகவும் |

**(இ) மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | யட்டவத்த பிரதேச செயலகத்தினால் ரூபா 840,000 பெறுமதியான 20 சோஜி தையல் இயந்திரங்கள் செயற்படுத்தப்படாத செயற்திட்டமொன்றின் பெயரைப் பயன்படுத்தி போலியான ஆவணங்களைப் தயாரித்து தனியார் பங்குடமை வியாபாரமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தன. | பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் அவர்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்குறித்த செயற்திட்டத்தை செயற்படும் நடைமுறை மற்றும் ஆவணங்களை பராமரித்தலில் பலவீனங்கள் காணப்பட்டதாக ஏற்றுக் கொள்வதாகவும் சிதைவடைந்து செல்லும் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் நேர்முக பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட பயிலுனர்களும் நியாயமொன்று வங்க எடுத்த முயற்சியொன்றாகவும் |
| (ஆ) | மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகள் ரூபா 137,800 பெற்றுக்கொண்டிருக்கையில் அக்காலப்பகுதியில் குழுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி அரசின் இரண்டு வாகனங்களை பயன்படுத்தி இருந்தார். | அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட வேண்டியதுடன் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் | அவ்வாகனங்க்ள ன்று பதவிநலை உத்தியோகத்தர்களின் வேண்டுகோலின் பிரகாரம் அவர்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் திட்டமிடல் பணிப்பாளர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தவில்லையெனவும் அவருக்காக எரிபொருளுக்காக அரின் பணம் செலவிடப்படவில்லை யெனவும் |

**(ஈ) ஏனைய**

**--------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | மாத்தளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் மின்தூக்கி வழங்கியதன் பின்னர் உற்பத்தி உத்தரவாத சான்றிதழை சமர்ப்பிக்காதிருக்கையில் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக ஒப்பந்தக்காரருக்கு 50 சதவீதமான ரூபா 2,580,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கொடுப்பனவு தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் | மின்உயர்த்தி இறக்குமதி செய்யும் நாட்டின் சார்பாக நாணயக் கடிதத்தைத் திறக்க முதலாவது தவணை கொடுப்பனவு செய்யப்பட்டது. இதுவரை மின்உயர்த்திக்காக முழுத் தொகை செலுத்தப்படாததால் இறுதிக் கொடுப்பனவிற்கு முன்னர் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றால் அதனை சரிசெய்வதற்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக அறிவிக்க்பபட்டிருந்தது. |
| (ii) | நாவுல லிஹினிபிட்டிய நீர்த் திட்டத்திற்காக பொருத்தப்பட்டிருந்த ரூபா 65,000 பெறுமதியான நீர் பம்பி நாவுல பிரதேச சபை உப தலைவரால் எடுத்துச் செல்லப்பட்டுடிருந்த போதிலும் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் மீண்டும் ரூபா 375,000 செலவில் நீர்பம்பியொன்று பொருத்தப்பட்டிருந்தது. | அரசின் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பாக சட்டரீதின நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீர் பம்பி லிஹினிபிட்டிய கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு அல்லது பிரதேச சபை உறுப்பினரிடம் இருப்பதாக வௌப்படுத்தப் பட்டிருப்பதால் மீண்டும் பரிசோதனையொன்றை மேற்கொண்டு நீதிமன்ற நடைமுறையொன்ற மூலம் அல்லது அரசிற்குச் சொந்தமான ஆதனமொன்றான இந்நீர் பம்பியை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு நாவுல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கேட்கப்பட்டுள்ளது. |
| (iii) | மாத்தளை பிரதேச செயலகத்தின் மூலம் தனியார் ஒருவரின் வீட்டிற்கு அருகே வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 257,386 கொடுப்பனவு, பொருட்கள் | பொருட்கள் பரிசோதனை அறிக்கை பெற்றக்கொண்டு கொடுப்பனவு செய்தல் அல்லது பரிசோதனை அறிக்கை | செயற்திட்டம் முடிந்தபின் அதிக மழைக்காலமாக இருந்தமை காரணமாகவும், ஏராளமான திட்டங்கள் முடிக்கப்பட்டு இருந்தமை, பூர்த்தி செய்யப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சித்தியடையாவிட்டால் நட்டத்தை அறவிடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். | செயற்திட்டங்களுக்காக பட்டியல்களை துரிதமாக செலுத்தி வேண்டியிருந்ததால் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் பேரில் 25 சதவீதத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்ட தாகவும் இவ்வாண்டின் போது கொங்கிரீட் தரப் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் 10 சதவீதத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் |
| (iv) | உகுவெல பிரதேச செயலகத்தின் பரகஹஅல விளையாட்டரங்கிற்கு அண்மையில் அனர்தத்திற்குள்ளான பக்கச் சுவர் நிர்மாண செயற்திட்டத்திடன் நிர்மாணக் குறைபாடுகள் காணப்பட்ட போதும் அதற்காக ரூபா 717,855 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு ஆலோசணையின் பிரகாரம் தரத்தின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். | குறைபாடுகளை மீண்டும் தயார்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்ததாகவும் இதன் பிறகு நிர்மணங்களின் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் கூடிய கவனம் எடுப்பதாக |
| (v) | மாவட்ட செயலகத்தினால் நகில்ஸ் அழகினை இரசிக்கும் கூடத்தை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த அளவீட்டுப்பத்திரம் (BOQ) உரிய முன் மதிப்பீடொன்று இல்லாமல் தயாரிக்கப்பட்ட காரணத்தினால் ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 10 வேலை விடயங்களுக்குரிய அளவீட்டுப்பத்திரம் 3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் திருத்த மதிப்பீட்டின் மூலம் மாற்றப்பட்டிருந்தது. | செயற்திட்டம் தொடர்பாக அளவீட்டுப்பத்திரம் தயாரிக்கும் போது கேள்வி மதிப்பீட்டுக்குழுவால் சரியாக மதிப்பீடு செய்து சரியாக தயாரிக்கநடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்படு தயாரிக்கப்பட்டதன் பின்னர் நடைமுறையில் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது இட மாற்றப்பட்டதால் உருப்படிகளின் அளவு பொறியியலாளர் ஆலோசணையின் பிரகாரம் மாற்றப்பட்டதாக |

| | | | |
|---|---|---|---|
| (vi) | கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தளை பிரதேச செயலகத்தினால் மின் இணைப்புக்களை வழங்குவதற்கு தேவையான மட்டத்தில் வீடுகளை நிர்மாணிக்காத 13 நபர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக ரூபா 376,740 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நோக்கததிற்குட்பட்ட நலனாலிகளை தெரிவு செய்யாமை தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்ட பதிவேட்டின் பிரகாரம் மின்சாரத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதுவரை இவ்வனைத்து வீடுகளினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததாகவும் தற்போது அனைத்து நலனாலிகளுக்கும் மின்இணைப்பு வழங்கி முடிந்துள்ளதாகவும் |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தளை பிரதேச செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களில் 26 சதவீதமான ரூபா 126.158 மில்லியனான 811 புதிய செயற்திட்டங்கள் குறித்த காலஎல்லைக்குள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் மின்தூக்கி வழங்கியதன் பின்னர் உற்பத்தி உத்தரவாத சான்றிதழை சமர்ப்பிக்காதிருக்கையில் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக ஒப்பந்தக்காரருக்கு 50 சதவீதமான ரூபா 2,580,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்கை நிறைவேற்று வதற்காக திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் நடவடிக்கை எடுப்பதற்கும் எடுகக் வேண்டும்.கூ | 2019 நவம்பர் 20 ஆந் திகதிய BD/GPS/155/0901/HA ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உடன்படிக்கை கைச்சாததிடாமை மற்றம் உடன்படிக்கை கைச்சாத்திட்டு வேலை ஆரம்பிக்காமல் நிறுத்த நேர்ந்தமை, பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாமை, கட்டுநிதி கிடைப்பதில் தாமதம், தேர்தல் காலமாக அறிவிக்கப்பட்டமை, போன்ற காரணங்களால் இச்செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாமல் இநந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தம்புள்ள பிரதேச செயலகத்தின் ரூபா 6,000,000 தொகையான 07 செயற்திட்டங் களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் நிர்மாண வேலைகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் குறிக்கப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்விற்கு உட்பட்ட செயறதிட்டங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு 2020 செப்தம்பர்17 ஆந் திகதிக்கு முன்னர் தருமாறு தம்புள்ள பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (Out come) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நாவுல லிஹினிபிட்டிய நீர் முன்மொழிவுத் திட்டம் தொடர்பாக 2008 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை 06 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 5,769,793 செலவில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அச் செயற்திட்டத்தின் மூலம் எந்தவொரு பாவனையளாருக்கும் நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பணம் விடுவிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற நடவடிக்கை எடுத்தல். | கொஸ்கொல்ல – ஆதாவல வீதி அபிவிருத்தி மற்றும் விசல் மாத்தளை நீர் செயற்திட்டத்தின் நிர்மாணம் காரணமாக நீர் விநியோகக் குழாய் அதகளவில் பாதிக்கப்பட்டிருந்தமையால் இந் நீர் முன்மொழிவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நீர் விநியோகிக்க முடியாதிருந்தததுடன் இந் நீர் முன்மொழிவுத் திட்டத்தை செயற்படுத்து வதற்காக மேலும் நிதி ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக விசல் மாத்தளை நீர் செயற்திட்டத்திற்காக நீர்க் குழாய்கள், உபகரணங்கள் மற்றும் பொருத்துதல்களை ஒப்படைத்தல் மிகவும் பொருத்தமானது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 02 பிரதேச செயலகங்கள் மூலம் கம்பெரலிய மானியத்தின் கீழ் தற்காலிக கூரைகளை நிரந்தர கூரைகளாக மாற்றுதல் தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 555,674 பெறுமதியான கூரைத்தகடுகள் மற்றும் பலகைகள் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப் படாது சிதைந்து காணப்பட்டது. | எதிர்பார்த்த நோக்கங்கங்களை அடைய நடவடிக்கை எடுத்தல். | பயனாளிகளின் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக மாத்தளை பிரதேச செயலலகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற பொருட்கள் வீடுகளில் குவிக்கப்பட்டு இருந்ததுடன் இதுவரை கூரைகள் போடுவதற்கான நடவடிக்கைகள் முடிவடைந்ததாகவும் |
| (இ) | உக்குவலை பிரதேச செயலகத்தில் 03 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா. 2,040,151 தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் பெறப்படவில்லை. | நிதி ஒதுக்கீடுகளின் போது மற்றும் செயற்படுத்தலின் போது அச் செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நோக்கி வினைத்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல். | **தவலங்கொய நீர் நீடிப்பு**<br><br>2020 ஆம் ஆண்டில் நீர்ப் பம்பி இணைத்து மின்சாரத் தொடர்பைப் பெற்றுக் கொடுத்து 28 குடும்பங்கள் தொடர்பாக குடிநீரைப் பெற்றுக் கொடுத்திருத்தல்.<br><br>**தாலிங்காமட குளிக்கும் பீளியை நிர்மாணித்தல்.** ஒருவர் குளிப்பதற்கு போதியளவு நீர் இல்லை என்றும் மழைகாலத்தில் போதியளவு நீர் இருப்பதாகவும் ஏற்றுக் கொள்கிறேன்.<br><br>**தும்புகொல பொது பீளியை அபிவிருத்தி செய்தல்**<br><br>இக் குளியல் பீளி மேம்படுத்தப்பட்ட பின்னர் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 06 சந்தர்ப்பங்களில் 05 வேலைத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 3,748,000 ஆகவும் நிதி ஒதுக்கீடுகள் மூலம் ரூபா. 3,685,398 செலவில் யடவத்த பிரதேச செயலாளர் அலுவலகம் மூலம் கஹவத்த குடி நீர் செயற்திட்டத்தின் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அங்கு குறைபாடுகள் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் எந்தவொரு நீர் நுகர்வோருக்கும் நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புணம் வெளியிடப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் திட்டமிடலின்றி அரச நிதிகளின் செலவு தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தை செயற்படுத்த தேவையான நீர், நீர் தாங்கிக்கு அனுப்புவதற்கு முடியாமலிருந்ததுடன் இது தொடர்பாக உரிய தரப்பினர் தவறாது அறிவுறுத்தப்பட்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சிறந்த முயற்சிகள் இருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகளுக்கு நீரைப் பெற்றுக் கொடுக்க முடியாதிருந்தமை. |
| (உ) | யட்டவத்த பிரதேச செயலகத்தில் மாளிகாதென்ன தனியார் வீடொன்றின் அருகில் செல்லும் வீதி அபிவிருத்தித் திட்டத்தில் வஓரங்களில் காணப்படும் மரங்களை வெட்டாமையால் வீதியின் அகலம் குறுகிக் காணப்பட்டது. மேலும் சில இடங்களில் கூடிய சாய்வுடன் அமைக்கப்பட்டிருந்தமையால் அப் வீதியில் வாகனங்கள் செல்வது சிரமமாகக் காணப்பட்டதால் செலவான ரூபா. 639,619 தொகையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படவில்லை. | வினைத்திறனாக பயன்படுத்த முடியாத நிர்மாணங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூறல். | 08 அடி அகலத்துடன் 1 கியூப் லொறியொன்று பயணம் செய்யக் கூடிய விதத்தில் இவ் வீதி அமைக்கப்பட்டிருக்கிறது. |

## 3.4 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றமடையாதிருந்த திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்திற்கான மின் தூக்கி பொருத்துவதற்கான பகுதிக் கொடுப்பனவாக ரூபா. | நிதி விடுவிக்கப்பட்டது ம் குறித்த வேலைகளை நிறைவு | தற்போது இம் மின் தூக்கியானது முற்றாக பொருத்தப்பட்டு பயன் படுத்தகூடிய நிலையில் காணப்படுவதுடன், |

| | | | |
|---|---|---|---|
| | 2,580,600 வழங்கப்பட்டிருந்த போதும் அவ்வியந்திரம் பொருத்தப்படாது நீண்ட காலமாக அலுவலக வளாகத்தினுள் வைக்கப்பட்டிருந்தது. இதனால் சில பகுதிகள் துருப்பிடித்திருந்தன. | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | இதற்கான மொத்த பணமும் செலுத்தப்படா மையினால் இறுதிக் கொடுப்பனவுக்கு முன்னர் ஏதாவது குறைபாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்து தருவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக. |
| (ஆ) | சுற்றுலா அபிவிருத்தி வன விலங்குகள் மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சின் மூலம் க்டைக்கப்பெற்ற நிதியைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட நகல்ஸ் வனப்பினை இரசிப்பதற்கான பார்வையாளர் கூடமொன்றை அமைக்கும் திட்டத்தின் வேலைகள் முடிவடையாத நிலையில் அவ் வேலைகள் முடிவுற்றதாக எண்ணி ஒப்பந்தத் தொகையில் கையிருப்பு நிதி 10 வீதம் மற்றும் விசேட இருப்பு 5 வீதம் நீங்கலாக ரூபா. 3,454,435 நிதி ஒப்பந்தக்காரருக்கு செலுத்துவது உறுதி செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த வேலைகள் நிறைவுறாத நிலையில் வேலைகள் முடிவுற்றதாக எண்ணி கொடுப்பனவு மேற்கொள்வது குறித்து அடுத்த நடவடிக்கை எடுக்க நேரிடல் | தூர நோக்கிகள் வினியோகம் செய்து பொருத்துவதற்கான பொருத்தமான ஒரு நிறுவனத்தினை ஒப்பந்தக்காரருடன் இணைந்து தேடிக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது சாத்தியமாகவில்லை. அந்த விடயம் நீங்கலாக வேலை நிறைவு செய்யப்பட்ட ஏனைய விடயங்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. |
| (இ) | கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களது வீடுகளின் கூரைத் திருத்தத்திற்காக உக்குவளை மற்றும் இரத்தோட்டை ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களினாலும் ரூபா. 39,336,630 செலவிடப்பட்டிருந்த போதும் அத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பலன் அடையப்பெற்றிருக்கவில்லை. | நிதி விடுவிக்கப்பட்ட திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பலன்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அவ்வாறு நடைபெறாத பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த திட்டத்திற்குத் தேவையான பலகை மற்றும் முகட்டு மறைப்புகள் கிடைக்கப்பெறாமை, பாதுகாப்புப் படையினரின் வேலைப் பங்களிப்பினைப் பெறல், கூரைத் தகடுகளின் விலைகளில் காணப்பட்ட பிரச்சினைகள் ஆகிய காரணங்களால் போதிய முன்னேற்றத்தினை அடைய முடியாதிருந்ததெனவும் திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் |

## 3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ளை பிரதேச செயலகத்தின் மூலம் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களுக்கான அலுவலக சுத்திகரிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் அதை உரிய முறையில் நிறைவேற்றாமை தொடர்பாக அறிவித்திருந்த போதும் அந்த ஒப்பந்தக்காரரை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்காது விலைமனு சமர்ப்பிக்காத வேறொரு நிறுவனத்திற்கு கூடிய விலைக்கு கையளிக்கப்பட்டதன் காரணமாக 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் ரூபா. 228,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படாத ஒப்பந்தக்காரர் நீக்கப்படுவதுடன் பெறுகைகள் வழிகாட்டிக்கு மாற்றமாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட தன் காரணமாக ஏற்பட்ட நட்டத்தினை அறவிடல் இதற்கு பொறுப்பானவர்கள் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல். | சந்திம கிளீனிங் சேவிஸ் நிறுவனத்தின் சேவைகள் குறித்து திருப்பியடைய முடியாதிருந்ததன் காரணமாக அவர்களது சேவையினை இடைநிறுத்தி, மீண்டும் விலைமனு கோருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாது இதற்கு முன்னர் அலுவலக சுத்திகரிப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்ட பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட ஏ.பீ.ஆர் கிளீனிங் சேவிஸ் நிறுவனத்திற்கு 2017 மே 01 ஆம் திகதி தொடக்கம் காரியாலய சுத்திகரிப்பு வேலைகளை கையளிப்பதற்கு பெறுகைகள் குழு தீர்மானித்ததாக. |
| (ஆ) | ரத்தோட்டை பிரதேச செயலகத்தின் அடிப்படை வசதிகள் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 02 இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா. 141,750 பெறுமதியான உடற்கட்டமைப்பு உபகரணங்கள் 11 குறைபாடாகக் காணப்பட்டன. | இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் தொடர்பில் பின்னூட்டல் மேற் கொள்ளப்படல். | இது தொடர்பாக விசாரணை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென |

**3.6 பொருளாதார ரீதியாக பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி ஆலோசனைகளின் கீழ் மாத்தளை பிரதேச செயலகத்தின் மூலம் எக்சத் திரிய மகளிர் அமைப்பிற்கு ரூபா. 1,400,000 பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டிருந்தன. | பதிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கு வழங்கக்கூடிய பொருட்களை மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | உறுப்பினர் நிதியின் கிழ் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் ரூபா. 1,400,000 பெறுமதியான உபகரணங்கள் எக்சத் திரிய மகளிர் அமைப்பிற்கு வழங்கப்பட்டதென. |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் உட்பட 10 பிரதேச செயலகங்களில் 21 பதவிகளுடன் தொடர்பான 239 ஊழியர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல். | ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதியும் 30 அல்லது 31 ஆம் திகதியிலும் அறிக்கைகள் குறித்த அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படு வதாகவும் குறித்த வெற்றிடங்களுக்காக ஊழியர்கள் இணைக்கப் படாமை ஆகிய காரணங்கள் இருப்பதாக. |
| (ஆ) | முகாமைத்துவ சேவை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஜுலை 18 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிக ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்பட முடியாது. என்னும் மாவட்ட செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் (கொள்கை | வெற்றிடங்கள் காணப்படுகின்ற அலுவலகங்களுக்கு மேலதிக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும். | மாவட்ட செயலகத்தின் பணிக்குழுவினை அங்கீகரிப்பதற்காக நடைபெற்ற மீளாய்வின் போது திட்டமிடல் பிரிவில் இணைக்கப்பட்டிருந்த 10 பதவிகளை அங்கீகரிப்பதற்கு தேவையான ஆவணங்கள் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு |

திட்டமிடல்) பதவி உள்ளிட்ட 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மற்றும் 03 அரச முகாமைத்துவ உதவியாளர்களும் மேலதிகமாக உள்ள நிலையில் ரூபா. 3,182,515 தொகை சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வனுமதியின் பின்னர் இம் மேலதிகங்கள் காணப்படாது எனவும், உதவிப் பணிப்பாளர் (கொள்கை திட்டமிடல்) பதவி மேலதிகமாகக் காணப்படுவதுடன் அப்பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்ற ஒரு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக.